அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 23/2014

எனது இல.: EST-7/LEAVE/03/3143
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

2014.10.07

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

## தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XII இன் பிரிவு 14 இன் திருத்தம்

தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XII இன் பிரிவு 14 இன்பால் தங்களின் கவனம் இத்தால் ஈர்க்கப்படுகின்றது.

02. தர உயர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கென சேவைப் பிரமாணக் குறிப்புக்கள் அல்லது ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு ஒத்திசைவாக பட்டப்பின் பட்டக் கற்கைநெறிகளைத் தொடரும் அரசாங்க அலுவலர்களுக்கு பரீட்சைகளில் தோற்றுவதற்காக சம்பளத்துடனான விடுமுறையினை (உள்நாட்டு) வழங்குவதற்கு 2014.07.03 ஆம் திகதியில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டுள்ளது.

03. அதற்கிணங்க தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XII ஆனது பிரிவு 14 இல் 14:7 மற்றும் 14:7:1 ஆக பின்வரும் உட்பிரிவுகளின் உள்ளடக்கத்துடன் இத்தால் திருத்தப்படுகின்றது.

> 14:7 குறித்த பதவி ஒன்றுக்குரிய சேவைப் பிரமாணக் குறிப்பு அல்லது ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு ஏற்ப பட்டப்பின் அல்லது உயர் பட்டம் ஒன்றை நிறைவுசெய்யுமாறு கோரப்படும் அத்தகைய நிலமைகளில் கூறப்பட்ட பட்டக் கற்கைநெறிகளுக்காக கற்கை விடுமுறையினைப் பெற்றுக்கொள்ளாமல் உள்நாட்டு ரீதியாக நடாத்தப்படும் உரிய கற்கைநெறிகளை தொடரும் அலுவலர்களுக்கு அவர்களின் இணக்கத்தின் பேரில் தொடர்ச்சியாக அல்லது விட்டுவிட்டு ஆகக்கூடுதலாக 10 நாட்களுக்கு உட்பட்டு கற்கைநெறிப் பரீட்சைகளுக்குத் தயார்படுத்தும் நோக்கத்திற்காக மட்டும் சம்பளத்துடனான கற்கை விடுமுறையானது வழங்கப்பட முடியும்.
>
> 14.7.1 சேவைப் பிரமாணக் குறிப்பு அல்லது ஆட்சேர்ப்பு நடைமுறையில் ஏதேனும் வேறுபட்ட விதத்தில் குறிப்பிடப்படாவிடின் அலுவலர் ஒருவருக்கு அத்தகைய கற்கை விடுமுறையினை வழங்குதலானது ஒரு தடவைக்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும். மேலும், பரீட்சையில் சித்தியெய்த அலுவலர் தவறுதல் அல்லது பரீட்சைக்குத் தோற்ற இயலாமை போன்ற காரணங்களினால் மேற்படி பிரிவின் கீழ் மீண்டும் சம்பளத்துடனான கற்கை விடுமுறையானது வழங்கப்படலாகாது.

04. 1985.11.18 ஆம் திகதிய 312 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையானது இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

ஒப்பம்/ பி.பீ. அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு